Judicial Form No. 53
[See Rule 42]
DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE,PAPPIREDDIPATTI**

Calendar **CC. No.82/2020**

| | |
|---|---|
| Deposition of Sworn Statement | **PW7** |
| Name | : மரு.ப.சுபலட்சுமி |
| Father's Name/Husband Name | : நரேந்திரன் |
| Village | : தர்மபுரி |
| Taluk | : தர்மபுரி |
| District | : தருமபுரி |
| Religion | : Hindu |
| Age | : 42 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the **27.07.2026.**

**எதிர்கள் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.**

**சாட்சி சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டார்**

**முதல் விசாரணை**

நான் தற்போது M.D படிப்பதற்காக தூத்துக்குடி அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனையில் இரண்டாம் ஆண்டு படித்து வருகிறேன்.

கடந்த 17.01.2019 ம் தேதி நான் அரசு மருத்துவமனை பாப்பிரெட்டிபட்டியில் பணியில் இருந்தபோது 36 வயது உடைய சுமதி என்பவர் சிகிச்சைக்காக வந்திருந்தார். அவரை விசாரித்தபோது அவர் தன்னை அடையாளம் தெரிந்த ஒரு ஆண் மற்றும் ஒரு பெண் சேர்ந்து கட்டையால் பூனையானூரில் அன்றைய மதியம் 1.15 மணியளவில் தாக்கியதாக கூறினார். அவரை பரிசோதித்தபோது கீழ்கண்ட காயங்கள் தென்பட்டன 1. வலது மணிகட்டில் வலியும் வீக்கமும் இருந்தது. 2. வலது கையில் சிராய்ப்பு காயங்கள் இருந்தது. அவரை உள்நோயாளியாக அனுமதித்து சிகிச்சை அளித்தேன். அவரை நான் மேல் சிகிச்சைக்காக தர்மபுரி அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனைக்கு பரிந்துரைந்தேன். அவர் அங்கு செல்ல விருப்பம் இல்லை என தெரிவித்தார். எனவே அவருக்கு ஏற்பட்ட காயம் சாதாரண காயமாக இருக்க கூடும் என கருத்துரை வழங்கினேன்.

**அ.சா.1 ன் காயச்சான்றிதழ் அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

வழக்கு தொடர்ந்த போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

அ.சா.1 மருத்துவமனைக்கு எத்தனை மணிக்கு சிகிச்சைக்கு வந்தார் என்றால் மதியம் 2 மணிக்கு வந்தார்.

காயச்சான்றிதழில் குறிப்பிட்ப்பட்டுள்ள 1, 2 காயங்கள் சாதாரணமாக வரப்பில் இருந்து தவறி விழுந்தால் கூட ஏற்பட வாய்ப்புள்ளது என்றால் சரிதான்.

**மேற்படி சாட்சியம் என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்டு, பதிவு செய்யப்பட்ட சாட்சியம் சாட்சிக்கு படித்துக்காட்டி அவர் சரி என ஒப்புக்கொண்டு என் முன்னர் கையொப்பம் செய்தார்.**

**நீதித்துறை நடுவர் பாப்பிரெட்டிபட்டி.**